**கவனிக்க.**-2021.10.01 ஆந் திகதிய 2248ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2249 - 2021 ඔක්තෝබර් මස 08 වැනි සිකුරාදා - 2021.10.08

*2249ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1398 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1398 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஒற்றோபர் மாதம் 29ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021,ஒற்றோபர் மாதம்15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1397- B 082275 - 405 (2021/10)

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கனடா, ஒன்ட்டாரியோ, M1E 5K4, போன்ஸ்பியல் டிரைவ், 196 என்ற முகவரியைச் சேர்ந்த கலைச்செல்வன் கணேசபிள்ளை ஆகிய நான், திருகோணமலை, உவர்மலை, லோவர் வீதி, 138 என்ற முகவரியைச் சேர்ந்த ஸ்ரீதரன் சாம்பசிவம் என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட கனடா, ஒன்ட்டாரியோ, M1T 4P6, டொரண்டோ, மிலிடரி டிரெயில், 751 என்ற முகவரியைச் சேர்ந்த சட்டத்தரணி அனோஷன் அஹங்கம அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.04.04ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை உடனடியாக பயனுறும் வகையில் 2021. 08.24 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன். அத்துடன் இதன்பின்னர் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் அவரால் செய்யப்படும் எவ்வித செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் வெளிப்படுத்தி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

கலைச்செல்வன் கணேசபிள்ளை

10- 93

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

புத்தளம் மாவட்டத்தில், மாறாவில தபால் பிரிவில் முதுகட்டுவ “சேமிரின்” இல்லத்தில் வசிக்கும் குருப்பு ஆராச்சிகே செமிரன் டேம் ஒஸ்வேல்ட் ரொட்ரிகோ ஆகிய நான், 2016.01.28 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு டென்சில் பொன்சேக்கா சான்றுப்படுத்திய பத்தரமுல்ல பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள அற்றோணித் தத்துவப் புத்தகத்தினது 157 ஆம் தொகுதியில் 140 ஆம் இலக்க பத்திரத்தின் 1297 ஆம் இலக்க நாட்குறிப்பேட்டு புத்தகத்தில் 2016.02.01 ஆந் திகதி 38816 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் மூலம் கம்பஹா மாவட்டத்தின் கட்டான, தபால் பிரிவில் களுவரிப்புவ “சாந்தி” இல்லத்தில் வசிக்கின்ற குருப்பு ஆராச்சிகே செமிரிதா தயோத்தி மெச்ரினா ரொட்ரிகோ என்பவரை எனது சட்டபூர்வமான அற்றோணித்தத்துவ ஆளாக நியமித்துள்ள அந்த அற்றோணித்தத்துவ பத்திரத்தை இன்று முதல் இரத்துச் செய்து பிரகடனப்படுத்தினேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆகையால், அந்த அற்றோணித் தத்துவப்பத்திரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சகல செயல்களும் இன்றிலிருந்து செல்லுபடியற்றதாகவும் அதிகாரமற்றதாகவும் இருக்கும் எனவும் மேலும் அறியத்தருகின்றேன்.

குருப்பு ஆராச்சிகே செமிரன் டேம் ஒஸ்வேல்ட் ரொட்ரிகோ.

10-34

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* எமேசிங் எக்ஹபோட் லங்கா (பிவிடீ) எல்டீடி

*பதிவிலக்கம் :* பீவீ 00244179

*கூட்டிணைப்புத் திகதி :* 2021.08.24

*பதிவு முகவரி:* 75/D, திஹிட்டியாவல, வட்டபல, பிலிமந்தலாவை

பணிப்பாளர் சபை.

10- 105

# ஏல விற்பனைகள்

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — பிரதான அலுவலகக் கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் ஆதனம் ஏல விற்பனை

பிரசித்த ஏல விற்பனை

அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016. 02. 15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 14024 இல் குறிக்கப்பட்ட மருதானை குப்பியாவத்த கிழக்கு, தம்ப மாவத்தையில் கெம்ப்பெல் அவெனியு முன்பு கெம்பெல் ப்ளேஸில் டெம்பெல் லேன் கிட்டியாகார எனப்படும் பெறுமதிபெற்ற இடம் ( நிலவிரிவாக்கம் 35.62 பே.)

கிட்டியாகார என்று அழைக்கப்படும் அனைத்து நில ஒதுக்கீடுகளும் உள்ளிட்டு மேற்கு மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவு, கொழும்பு மாநகர சபை வரம்புக்குள், குப்பியாவத்த கிழக்கு கிராம அலுவலர் பிரிவிற்குள் வார்டு இல. 31, மருதானை கெம்பெல் அவெனியு முன்பு கெம்பெல் பிளேசில் டெம்பெல் லேன் , ஸ்ரீ தம்ம மாவத்தை, மதிப்பீட்டு இல. 30, 30A, 30 1/1, 30 1/2, கிட்டியாகர என்று அழைக்கப்படும் வளாகம், அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரினால்

தயாரிக்கப்பட்ட 2016, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 14024 இல் குறிக்கப்பட்ட முப்பத்தைந்து தசம் ஆறு இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.35. 62பே.) அனைத்து நில ஒதுக்கீடுகளும் உள்ளிட்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் அனைத்துமுடனும்.

பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். எஸ். ஹல்லொலுவ வினால் உறுதிப்படுத்தப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தானத்தின் பெயருக்கு எழுதப்பட்ட 2016.07.30 ஆந் திகதி உறுதி செய்யப்பட்ட 3974 ஆம் இலக்க முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் சீ. எம். எல். வோக்கர்ஸ் புரொப்பட்டி டிவொலொப்மன்ட் ( பிரைவெட்) லிமிடெட் மற்றும் வோக்கர்ஸ் சீ . எம். எல். புரொப்பட்டி லங்கா ( பிரைவெட்) லிமிடெட் நிறுவனங்கள் கடனாளியாக தவணை தவறியுள்ளதால் ஹற்றன் நஷனல் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் சொல்லப்பட்ட முறியின் கீழ் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை சகல விதிப்பனவுகள் மற்றும் ஏலவிற்பனைக் கட்டணங்கள் உட்பட சகல செலவுகளையும் அறவிடுவதற்காக இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்படும் இடம்,

2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இங்கு கீழுள்ள அட்டவணையில் விபரமாக விளக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள் மருதானை குப்பியாவத்த கிழக்கு தம்மமாவத்தையில் கெம்ப்பெல் அவெனியு முன்பு கெம்பெல் பிளேசில் டெம்பெல் லேன் கிட்டியாகர எனப்படும் இடத்தில பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**பணிப்பாளர் சபையின் தீர்மானம் முடிவு அறிவித்தல்கள்**.- 2021.07.30 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2021.08.04 ஆந் திகதிய "மவ்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**.-ஆனந்த ராஜகருணா மாவத்தையில் சுமார் 500 மீற்றர் தொடர்ந்து ஸ்ரீ தம்மமாவத்தை நோக்கி வலது புறம் திரும்பவும். மற்றும் மேலே உள்ள சொத்துவரை சுமார் 250 மீற்றர் வரை செல்லவும். மேலே உள்ள சொத்து இடதுபுறம் உள்ளது. (கொழும்பு 10 நாலந்தாக் கல்லூரிக்கு அருகில்).

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் ;
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00.

மேலும் கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும்.மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாவிடத்து செலுத்திய பத்து வீத (10%) பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "சிரேஷ்ட முகாமையாளர் (வர்த்தக அறவீடு), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10."

தொலைபேசி இல. : 011- 2661833, 011-2661836, 011- 2661826.

கே. பீ. என். சில்வா (ச.நீ.),
சிரேஷ்ட ஏல விற்பனையாளர்,
விலைமதிப்பீட்டாளர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 109/12A, கோதமி வீதி,
பொரளை, கொழும்பு -08,
தொலைபேசி இல. : 011-2674626, 077-8441812.

10- 126